**தேசிய கண்டுபிடிப்பு நிறுவனம் - 2023**

-----------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய கண்டுபிடிப்பு நிறுவனத்தின் (“நிறுவனம்’’) 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிறுவனத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2019 இன் 22 ஆம் இலக்க தேசிய கண்டுபிடிப்பு நிறுவன சட்டம் | | | |
| (i) 3 இன் (ஈ) | பெறுபேறுகளை | கண்டுபிடிப்பாளர்கள் | சட்டத்தில் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு | அதிகரித்துக் கொள்வதற்காக கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் முன்முயற்சியாளர்கள் தொடர்பாக நிறுவனத்தின் நோக்கமாக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது நிறுவனத்தால் தனியார் மற்றும் அரச நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து 02 நிகழ்ச்சித் திட்டங்கள் மாத்திரம் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டு தொடர்புபடுத்தப்பட்டதன் காரணமாக இந்த நோக்கங்கள் போதியளவில் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மற்றும் முன்முயற்சியாளர்கள் தொடர்பாக தொடர்புபடுத்துவதற்காக எமது நிறுவனம் 2023 ஆம் ஆண்டின் போது நடாத்திச் சென்ற நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை அதனை விட அதிகமாக இந்தப் பணிகளின் போது கலந்துரையாடப்பட்ட பல விடயங்கள் நடைபெற்றிருந்தது. கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் முன்முயற்சியாளர்கள் தொடர்புபடுத்துவதற்காக உரிய தரப்பினர் ஆர்வமாக இருந்த போதும் அது குறுகிய காலத்தில் அடைந்து கொள்ளுதல் வசதியீனமாக இருந்ததுடன் NIA பதவியணியினர் இதற்காக அநேகமாக முயற்சி எடுத்து செயற்பட்டிருந்தனர். | குறிப்பிடப்பட்ட நோக்கங்களை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுவதற்க ாக உதவும் வகையில் திட்டங்களைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | சட்டத்தின் 4 இன் (ஊ) பிரிவு | கண்டுபிடிப்பு நடவடிக்கைகளின் பூர்த்தியினை வணிக மயப்படுத்துவதற்காக கண்டுபிடிப்புக்களின் சர்வதேச அலுவல்களுக்குரிய அமைச்சு திணைக்களங்கள் கண்டுபிடிப்பு நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தி மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அந்த முறைமையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை மற்றும் வெளிநாட்டு வழங்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் அந்த உற்பத்திகளுக்காக வெளிநாட்டு தொழில் முயற்சியாளர்களுடன் கலந்துரையாடப்பட்டது. எனினும் கண்டுபிடிப்பாளர்கள் தமது கண்டுபிடிப்பை வெளிநாடுகளில் உற்பத்தி செய்வதற்கு விருப்பம் தெரிவிக்காமை, இலங்கையில் கைத்தொழிலை ஆரம்பித்து நடாத்திச் செல்வதற்காக அதிக கிரயம் செலவிட வேண்டி | சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஏற்பட்டதன் காரணமாக அந்த முயற்சி தோல்வியடைந்திருந்தது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,347,843 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,598,340 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 7,946,183 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஆளணி வேதனங்கள், கட்டிட வாடகை செலவினம் மற்றும் வழங்கல் மற்றும் நுகர்வுகள் முறையே ரூபா 3,310,605 தொகை, ரூபா 3,182,256 மற்றும் ரூபா 978,735 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றல் மூலம் உருவாக்கப்பட்ட உயர் தொழில்நுட்ப முயற்சிகளுக்கான வசதிகளை வழங்குவதன் மூலம் தேசிய புத்தாக்க தொழில் முயற்சிகளுக்கு உபாய வழி நோக்கங்களுக்கு உதவியினை வழங்குதல் நிறுவனத்தின் இலக்காக இருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் போது வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருந்த தொழில்நுட்ப கையளித்தல் இரண்டு மாத்திரமே ஆகும். மேலும் நிறுவனத்தால் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ரூபா 665,890 செலவில் இணையதள பக்கமொன்று வடிவமைக்கப்பட்டு இரண்டு நிறுவனங்களின் கண்டுபிடிப்பு தரவுகள் மாத்திரம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தால் B2P Platform மெய்நிகர் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதில் தரவுகளை உள்ளடக்குதல் பல்வேறு ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகம் அல்லது தனியார் மட்டத்தில் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் ஆராய்ச்சிகளில் இருந்தாகும். நிறுவனத்தின் பணிப்பொறுப்புக்களாக அந்தத் தரவுகளை பரீட்சித்து இந்த மெய்நிகர் தளத்தில் காட்சிப்படுத்துவதற்கு பொருத்தமான தொழில் நுட்பங்களை தயார் நிலையில் (Technology Readiness Level) காணப்பட்டதா என கண்டறிந்து அவற்றை காட்சிப்படுத்துவதற்காக அங்கீகரித்தல் மற்றும் அதன் பிரகாரம் வசதிகள் வழங்குதல் ஆகும். தரவுகளை உள்ளடக்குதல் நிறுவனத்தின் பணிப்பொறுப்பாக இல்லாதிருந்ததுடன் அது நடைமுறையில் இல்லை. தற்போது வணிகமயப்படுத்துவதற்கு தயாரிக்கப்பட்ட தமது கண்டுபிடிப்புகள் இந்த B2P Platform மெய்நிகர் தளத்திற்கு அனுப்பி சகல ஆராய்ச்சி | நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிறுவனங்கள், பல்கலைக்கழகம் மற்றும் கண்டுபிடிப்பாளர்கள் ஆராச்சிகளில் இருந்து கோரியதனால் மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள் நடாத்தப்படுகின்றது. | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணி நடைமுறைகளின் பிரகாரம் நியமனத் திகதியில் இருந்து 03 வருட காலத்தில் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சைகளில் சித்தியடைவேண்டியிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 சனவரி 05 ஆம் திகதி வரையில் 11 உத்தியோகத்தர்களுக்காக நியமனம் வழங்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பான விண்ணப்பங்களும் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 04 உத்தியோகத்தர்களுக்கு 2025 சனவரி 01 ஆந் திகதிக்கு முன்னர் வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் தாமதமின்றி மேற்கொள்ளப்படும். | குறித்துரைத்த காலத்தில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |